**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.**

ம.சா. 3 நாள்: 15 .09.2025

வழக்கு எண் **MCOP No.160 /2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஈஸ்வர மூர்த்தி | ஊர் | : | நாமக்கல் |
| கணவர்/தந்தை பெயர் | : | பெரியசாமி | தாலுகா | : | சேந்தமங்கலம் நாமக்கல் மாவட்டம் |
| தொழில் | : | மண்டல மேலாளர் ஸ்ரீ ராம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் | வயது | : | 41 /2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் 3ம் சாட்சியின் முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் இறந்து போன பாண்டீஸ்வரன் ஸ்ரீ ராம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டில் திருக்கோகர்ணம் கிளையில் கிளை மேலாளராக பணிபுரிந்தார், பாண்டீஸ்வரன் இறப்பதற்கு முன்பாக மாதம் ரூ.30,000/– சம்பளம் பெற்றிருந்தார். ஆண்டு வருமானமாக ரூ.4,89,000/– பெற்று வந்தார். பாண்டீஸ்வரனின் 2019ம் வருடம் ஜனவரி மாத சம்பள சான்றிதழின் உண்மை நகல் **ம.சா.ஆ.16.** பாண்டீஸ்வரனின் 2019ம் வருடம் பிப்ரவரி மாத சம்பள சான்றிதழின் உண்மை நகல் **ம.சா.ஆ.17.** பாண்டீஸ்வரன் என்பவர் வருமான வரித்துறையில் 2018–2019 வரிவிதிப்பு வருடங்களுக்கு தாக்கல் செய்த படிவம் 16ன் உண்மை நகல் **ம.சா.ஆ.18.** பாண்டீஸ்வரன் என்பவர் வருமான வரித்துறையில் 2019–2020ம் வருடங்களுக்கு தாக்கல் செய்த படிவம் 16ன் உண்மை நகல் **ம.சா.ஆ.19**.

பாண்டீஸ்வரன் எங்கள் நிறுவனத்தில் பணியில் இருந்தார். அவருக்கு எதிர்கால சம்பளம் குறித்த Projection அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ.20.** எனது பணியாளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **ம.சா.ஆ.21.**

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR
Date: 2025.09.15 10:54:23 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**